ඌව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
ஊவா மாகாண கல்வித் திணைக்களம்
Uva Provincial Department of Education

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | ரோமன் கத்தோலிக்கம் – I | நேரம் : 3 மணி. |
|---|---|---|

- **சரியான விடையினைத் தெரிவு செய்க.**

1. தொடக்க நூலின் நீதிமானாகக் கருதப்படுபவர்,
   01. யோனா 02. யோவாக்கீம் 03. யோசேப்பு 04. நோவா

2. இறைவன் நோவாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் வெளி அடையாளம்,
   01. கல்மழை 02. விருத்தசேதனம் 03. வானவில் 04. கடல்

3. ‘நபி’ என்ற எபிரேயச் சொல்லால் அழைக்கப்படுபவர்,
   01. இறைவாக்கினர் 02. குலமுதுவர் 03. அரசர் 04. நீதிபதி

4. தூய பேதுருவின் மொழிபெயர்ப்பாளராக கடமை புரிந்தவர்,
   01. தூய யோவான் 02. தூய லூக்கா 03. தூய மாற்கு 04. தூய மத்தேயு

5. கத்தோலிக்க திருமணத்தின் பண்புகள்,
   01. ஒருமை, விட்டுக்கொடுப்பு 02. ஒருமை, கட்டாவிழாமை
   03. தியாகம், ஒற்றுமை 04. ஒருமை, உண்மை

6. திருமுழுக்குப் பெறும் குழந்தையின் ஆன்மீகத் தூய்மையை அடையாளப்படுத்துவது,
   01. பாஸ்காதிரி 02. தண்ணீர் 03. திருத்தைலம் 04. வெண்ணிற ஆடை

7. ஐநூல் உருவாகுவதற்குப் பங்களிப்புச் செய்த பிரதான இறையியல் மரபுகளின் எண்ணிக்கை,
   01. இரண்டு 02. மூன்று 03. நான்கு 04. ஆறு

8. ‘நான் உன்னைப் பெரிய இனமாக்குவேன்’ என்று கடவுள் வாக்குறுதி வழங்கியது,
   01. மோசேக்கு 02. ஆபிரகாமுக்கு 03. நோவாவுக்கு 04. காயினுக்கு

9. உண்மையைக் கடைப்பிடிக்கும்படி கூறும் கட்டளை,
   01. 3ம் கட்டளை 02. 8ம் கட்டளை 03. 9ம் கட்டளை 04. 10ம் கட்டளை

10. தூய லூக்கா நற்செய்தி நூலின் அடையாளம்,
    01. சிங்கம் 02. மனிதமுகம் 03. எருது 04. கழுகு

11. திருவிவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் உள்ள திருமுகங்கள்,
    01. 12 02. 21 03. 27 04. 46

12. இயேசு கிருஸ்துவின் கீழ்ப்படிவின் அடையாளமாக விளங்குவது,
    01. சிலுவை 02. திருவிவிலியம் 03. உயிர்ப்பு 04. மரணம்

13. ‘ஹொக்மா’ என்ற எபிரேய சொல்லின் அர்த்தம்,
01. அறிவு 02. ஞானம் 03. ஆன்மீகம் 04. விண்ணரசு

14. திருச்சபையின் முதல் மறைசாட்சி,
01. பேதுரு 02. தோமா 03. பவுல் 04. ஸ்தோவான்

15. தனிநபருக்கு எழுதப்பட்ட திருமுகம்,
01. பிலிப்பியர் 02. கொலோசையர் 03. பிலமோன் 04. எபேசியர்

16. திருவழிபாட்டு ஆண்டு எத்தனை வாரங்களைக் கொண்டது?
01. 47 02. 52 03. 62 04. 92

17. பொதுக்காலம் எத்தனை வாரங்களைக் கொண்டது?
01. 34 02. 42 03. 52 04. 2

18. யூத திருவிவிலியத்திலுள்ள நூல்களின் எண்ணிக்கை,
01. 46 02. 39 03. 66 04. 73

19. இணைத்திருமுறை நூல்கள்,
01. 1 02. 5 03. 7 04. 9

20. உரு சத்தி பிடிப்பதற்கான வயதெல்லை,
01. 18 – 60 02. 19 – 60 03. 20 – 60 04. 18 – 36

21. செக்கரியாவின் புகழ்ச்சிப்பாடல் பாடப்படும் சந்தர்ப்பம்,
01. காலை 02. பகல் 03. மாலை 04. இரவு

22. திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நூல்களின் எண்ணிக்கை,
01. 46 02. 27 03. 73 04. 66

23. எருசலேம் ஆலயத்தைக் கட்டிய அரசன்,
01. சவுல் 02. சாலமோன் 03. தாவீது 04. கீசு

24. திருவிவிலியத்தின் நூற்பிரிவுகள்,
01. 1 02. 2 03. 3 04. 4

25. பவுலின் குரு,
01. கமாலியேல் 02. அனனியா 03. கீசு 04. சவுல்

26. புனித ஜோசப்வாஸ் இலங்கையில் வந்திறங்கிய இடம்,
01. கண்டி 02. மன்னார் 03. சில்லாவை 04. வவுனியா

27. பழைய ஏற்பாட்டின் குரு,
01. மெல்கிசெதேக் 02. யேசுகிறிஸ்து 03. ஆரோன் 04. யோசுவா

28. சமாதானம் என்பதற்குப் பயன்படுத்தப்படும் எபிரேய சொல்,
01. ஷாலோம் 02. எலோகிம் 03. யாவே 04. அபாத்

29. இஸ்ரயேல் மக்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட கட்டளைகள்,
01. 1 02. 2 03. 5 04. 10

30. திருவெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்புகள்,
01. 5 02. 6 03. 4 04. 3

31. இஸ்ரயேல் மக்களுக்குரிய இலக்கக் குறியீடு,
01. 12 02. 6 03. 7 04. 5

32. போர்த்துக்கேயர் எமது நாட்டுக்கு வந்த ஆண்டு,
01. கி.பி. 605 02. கி.பி. 1605 03. கி.பி. 1505 04. கி.பி. 1606

33. திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டு ஞான நூல்களின் எண்ணிக்கை,
01. ஐந்து 02. ஏழு 03. பன்னிரண்டு 04. இருபது

34. திருவருட்சாதனங்கள் எத்தனை?
01. நான்கு 02. ஏழு 03. ஒன்பது 04. பன்னிரண்டு

35. சமூக அருளடையாளமாகக் கருதப்படுவது,
01. ஒப்புரவு 02. குருத்துவம் 03. நற்கருணை 04. நோயிற்பூசுதல்

36. இஸ்ரயேல் எதிர்கொண்ட முதலாவது பெருந்துன்பம்,
01. கல்மழை 02. தலைமகன் சாவு
03. தண்ணீர் இரத்தமாதல் 04. தவளைகள் பெருக்கம்

37. பாலைவனத்தில் யேசு நோன்பு இருந்த நாட்கள்,
01. இருபது 02. நாற்பது 03. முப்பது 04. அறுபது

38. விடுதலைப் பயணத் தலைவர்,
01. ஆரோன் 02. மோசே 03. ஆபிரகாம் 04. இயேசு

39. எபிரேயப் பிரதிக்கு வழங்கப்படும் இன்னுமொரு பெயர்
01. செப்துவாஜித் 02. வல்கேட் 03. மசரோடிக் 04. கிரேக்க பிரதி

40. பின்வருவனவற்றுள் இணைத்திருமுறை நூல்களுள் உள்ளடங்காத நூல்
01. தோபித்து 02. யோபு 03. யூகித்து 04. பாரூக்

(01x40= 40 புள்ளிகள்)

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | ரோமன் கத்தோலிக்கம் – II | |
|---|---|---|

- **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. **சுருக்கமான விடை தருக.**
    i. இஸ்ரயேலின் இறைவாக்கினரை வகைப்படுத்தும் பிரதான பிரிவுகள் எவை?
    ii. யாக்கோபுவின் புதல்வர்களுள் இருவரைக் குறிப்பிடுக.
    iii. குருக்கள் பாரம்பரியத்துக்குரிய இரு சம்பவங்களைத் தருக.
    iv. எழுத்து வடிவம் பெறாத சிறிய இறைவாக்கினர் இருவரைக் குறிப்பிடுக.
    v. லூக்கா நற்செய்திக்கு வழங்கப்படும் வேறு இரு பெயர்களை எழுதுக.
    vi. பழைய ஏற்பாட்டில் தொடக்க நூலில் குறிப்பிடப்படும் இறைவனுடன் உடன்படிக்கை செய்த நபர்கள் இருவரை எழுதுக.
    vii. தொடக்க நூலில் குறிப்பிடப்படும் விடயங்கள் இரண்டு எழுதுக.
    viii. இறைவாக்கினரின் பண்புகள் இரண்டு எழுதுக.
    ix. முதலாவதும் இறுதியுமான கொள்ளை நோய்களைக் குறிப்பிடுக,
    x. யோவான் நற்செய்தி எழுதப்பட்ட காலம், இடம் என்பவற்றைக் குறிப்பிடுக. (20 புள்ளிகள்)

02. i. நோவாவை இறைவன் தேர்ந்துகொண்டமைக்கான இரு காரணங்களைக் குறிப்பிடுக.
    ii. நேரிய வழியில் நடக்க உமக்கு உதவும் வழிகள் மூன்று தருக.
    iii. நோவாவின் வாழ்வின் ஊடாக உமது வாழ்விற்கென நீர் பெற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினைகள் ஐந்து எழுதுக. (10 புள்ளிகள்)

03. i. ஏவாளுக்கு இறைவன் வழங்கிய தண்டனைகள் இரண்டினை எழுதுக.
    ii. ஏவாளிடம் ஆசை பேசிய முறைகள் மூன்றினையும் எழுதுக.
    iii. பாவ வாழ்விலிருந்து திருந்தி வாழ இறையாசீர் வேண்டி செபம் ஒன்று எழுதுக. (10 புள்ளிகள்)

04. i. மாற்கு தனது நற்செய்தியை யாருக்காக எழுதினார்?
    ii. மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய நற்செய்தியின் அடையாளங்களைக் குறிப்பிடுக.
    iii. நான்கு நற்செய்திகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினைகள் ஐந்து எழுதுக.
    (10 புள்ளிகள்)

05. i. மோசே செய்த பணிகள் இரண்டு கூறுக.
    ii. இஸ்ரயேல் மக்கள் இறைவெளிப்பாட்டை அனுபவித்த சந்தர்ப்பங்கள் இரண்டு கூறுக.
    iii. உமது வாழ்வில் இறையன்பைப் பெற நீர் எவ்வாறு செயற்படுவீர் என ஐந்து உதாரணங்கள் தருக.

06. எவையேனும் இரண்டிற்குச் சிறு குறிப்பு எழுதுக.
    i. ஐந்நூல்
    ii. இறைவாக்கினர் ஏசா
    iii. யாவே பாரம்பரியம்
    iv. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்கள் (10 புள்ளிகள்)

LOL.lk
Learn Ordinary Level

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

## පසුගිය විභාග ප්‍රශ්න පත්‍ර




- Past Papers
- Model Papers
- Resource Books

for G.C.E O/L and A/L Exams

සමනල දැනුම

විභාග ඉලක්ක ජයගන්න
Knowledge Bank

Master Guide

**WWW.LOL.LK**

CASH ON DELIVERY

HOME DELIVERY

Whatsapp contact
+94 71 777 4440

Website
www.lol.lk

Order via WhatsApp

# 071 777 4440